[8th September 1970

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. வி. தங்கபாண்டியன் : ராமனாதபுரம் மாவட்டத்தில் கழக உயர்நிலைப் பள்ளிகளுக்காக ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள பல கட்டிடங்கள் இன்னும் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. அதுபற்றி மாவட்டத் தலைமைப் பொறியாளர்களிடமிருந்து மராமத்து செய்வதற்கான குறிப்பு, விண்ணப்பம் ஏதும் அரசிற்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இப்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப்பற்றித்தான் இங்கே குறிப்பு இருக்கிறது. இதுபற்றி விவரம் அறிய தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். எத்திராஜுலு : இந்த மாதிரி பல மாவட்டங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : எல்லா மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்றபடி ஓரளவுக்குப் பணம் ஒதுக்கப்பட்டு ''அட் ஹாக் கிராண்ட்'' என்று வைக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த மாவட்டக் கல்வி அதிகாரிகள் எந்தெந்தப் பள்ளிகள் அப்படிப் கட்டப்பட வேண்டுமென்று கணக்கிட்டு அந்த வகையில் வேலைத் திட்டத்தை அமைப்பார்கள். எல்லா மாவட்டங்களுக்கும் இது உண்டு.

Madurai Erskine Hospital

*72. *Q.*—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the last grade servants in Madurai Erskine Hospital went on strike in the third week of October, 1969 ;

(*b*) if so, the reasons therefor ;

(*c*) whether they have complained that the doctor is responsible for the death of one of their colleagues ; and

(*d*) if so, the action taken thereon ?

மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் 1969 அக்டோபர் மாதம் மூன்றாவது வாரத்தில் கடைநிலை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்களா ?

(இ) ஆமெனில், காரணமென்ன ?

(உ) தங்களின் சக ஊழியர் சாவிற்கு ஆஸ்பத்திரியின் பணியாற்றிய டாக்டர் பொறுப்பு என்று அரசாங்கத்திற்கு புகார் செய்துள்ளார்களா ?

(எ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

8th September 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மருத்துவமனை சுகாதார ஊழியர் ஒருவர் இறந்ததற்காக.

(உ) மதுரை மருத்துவமனை தொழிலாளர்கள் சங்கம், மருத்துவக் கல்வி நெறியாளருக்கு இதுபற்றி விசாரணை நடத்தும்படி ஒரு தந்தி அடித்தனர்.

(எ) மேற்கண்ட விசாரணை அறிக்கை தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, இப்படிப் பொறுப்பு வாய்ந்த டாக்டர்கள் அந்த ஆஸ்பத்திரியில் உள்ள பணியாளர்களையே கவனிக்காத சூழ்நிலை இருக்கும்போது, வெளியிலிருந்து வருகிற வியாதியஸ்தர்கள் சரியாகக் கவனிக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிற புகார்கள் அடிக்கடி வருகின்றன. பொறுப்பு வாய்ந்த டாக்டர்கள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யும்போது, அவர்கள் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : குறிப்பிட்ட அந்தத் துப்புரவுத் தொழிலாளர் சரியாக நடத்தப்படவில்லை என்று டாக்டர் குருசாமி என்பவர் மீது புகார் செய்யப்பட்டது. அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் அங்குள்ள துப்புரவுத் தொழிலாளர் அத்தனை பேரும் வேலை நிறுத்தம் செய்தார்கள். அங்குள்ள டீன் அதில் தலையிட்டு, சமாதானம் கூறி, அவர்களை வேலைக்குப் போகும்படி செய்து, அவர்கள் புகாரின் பேரில் தக்க நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார். அந்தக் குறிப்பிட்ட டாக்டர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு, அதன்பேரில் விசாரணை தொடங்கப்பட்டிருக்கிறது. அதுபற்றிய குறிப்பு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு, அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அந்த மருத்துவ மனையில் கடைநிலை தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வேலை நிறுத்தத்திற்கு என்ன காரணம் ? ஒரு கடைநிலை ஊழியர் இறந்துவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் அறிய விரும்புகிறேன். அத்துடன் இந்தக் கேள்வி சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் கொடுக்கப்பட்டதாக அறிகிறேன். சுமார் 11 மாதங்களுக்குப் பிறகு சொல்லப்படும் பதிலில் இன்னும் அந்த அறிக்கை பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வளவு கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : குறிப்பிட்ட தொழிலாளி பெருமாள் என்பவர் மார்பு வலி 14-10-69-ல் ஏற்பட்டதாகக் கூறினார். அவர் ''காசுவாலிடி'' பிரிவில் பணி புரிந்து வந்தார். அந்தப் பிரிவில் டியூடி அசிஸ்டெண்ட் ஃபிஸிஷியன் டாக்டர் குருசாமி என்பவர் இருந்தார். டாக்டர் குருசாமி அந்தத் தொழிலாளியை சரியாகக் கவனிக்கவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டது. அந்தத் தொழிலாளியை வெளியே போ என்று விரட்டினார் என்றும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார் என்றும் மற்றத் தொழிலாளிகள் அவர்

மீது குற்றம் சாட்டினர். அந்தத் தொழிலாளி அந்த இரவு அந்த மருத்துவமனை வெளியார் பகுதியில் தன்னுடைய கழுத்தைத் தானே அறுத்துக்கொண்டு கிடந்தார். மருத்துவ மனையில் அதைக் கண்டவர்கள் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அறுவைக் கூடத்திற்கு எடுத்துச் செல்லும்போது, அந்தத் தொழிலாளி இறந்துவிட்டார். அவர் மனம் உடைந்துபோய் இந்த நிலைக்கு வந்ததற்குக் காரணம் அந்த டாக்டர் தான் என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது. 14-10-69-ல் அதற்காக வேலை நிறுத்தம் செய்தார்கள். டீன் தலையிட்டு நடவடிக்கை எடுப்பதாகக் கூறி சமாதானம் செய்திருக்கிறார். டாக்டர் கபீர் என்பவரை விசாரணை அதிகாரியாக நியமித்து விசாரணை செய்யப்பட்டது. உடனே அந்த குருசாமி என்ற டாக்டர் மருத்துவப் பகுதியிலிருந்து கல்லூரிப் பகுதிக்கு மாற்றப்பட்டு விசாரணை செய்யப்பட்டது. அந்த விசாரணையின் அறிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் வந்திருக்கிறது. அதன் பேரில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Private Polytechnics

*73. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) the pattern of assistance given to private Polytechnics by the Government ; and

(*b*) whether any representation has been received from such Polytechnics requesting for increase in such assistance ?

தனியார் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்குப் பதில் அளிக்க வேண்டுகிறேன் :

(அ) தனியார் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளுக்கு அரசு எவ்வகை உதவியை அளித்து வருகிறது ?

(இ) அவ்வாறு அளிக்கப்படும் உதவியை மேலும் அதிகரிக்க வேண்டி அந்த பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) மத்திய அரசின் உதவி கிடைக்கப்பெறும் ஐந்தாண்டு காலம் வரை நிகர பற்றுக்குறையில் தொடரும் செலவினத்தில் 25 சதவீதமும் தொடரா செலவினத்தில் 25 சதவீதமும் உதவியாக கொடுக்கப்படுகிறது. இந்த முதல் ஐந்தாண்டு காலத்திற்கு தொடரும் செலவில் 50 சதவீதம் தொடரா செலவில் 50 சதவீதம் என்ற அடிப்படையில் மத்திய அரசு உதவியளிக்கிறது. மத்திய அரசின் உதவி நிறுத்தப்பட்டபின் மாநில அரசு நிகர பற்றுக்குறையில் 75 சதவீதம் உதவியளிக்கிறது.

(இ) ஆம்.

திரு. எம். எத்திராஜுலு : தனியார் பாலிடெக்னிக் பயிற்சிப் பள்ளிகள் எங்கெங்கே இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.